# சுதந்திர தின கறுப்புப் பேரணி வழக்கு

## 3 எம்.பிக்கள் உட்பட ஏழு பேரை விடுவித்தது யாழ். நீதிமன்றம்



வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிப் பயணித்த பேரணியில் கலந்துகொண்ட குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் இருந்து 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் விடுவித்தது.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்கப்பட்ட பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான

ஈ. சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட எழு பேரே வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 7 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன், கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சில ருக்கு எதிரான வழக்கு விசாரணையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

மேற்படி இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பாக பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டும் எனத் தெரிவித்தபோது பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு அனைவரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்ட நீதிமன்றம் பிரதிவாதிகள் அனைவரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.

இந்த வழக்குகளில் பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுடன் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் ஆஜராகியிருந்தார். (அ)


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 18 திங்கட்கிழமை 08.01.2024 கதிர் 153



14ஆவது
யாழ் சர்வதேச
வர்த்தகக் கண்காட்சி
JITF 2024
14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
முற்றவெளி மைதானத்தில்
JANUARY 19 | 20 | 21


## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத் தலைவிக்கு விளக்கமறியல் நீடிப்பு

வவுனியாவில் ஜனாதிபதியின் வருகைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியாவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை காலை வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாநகர சபை கலாசார மண்டபத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

ஜனாதிபதியின் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்துக்குச் செல்லும் பாதையில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல்



ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

2➤

## டயனா கமகேவின் மனு மீதான விசாரணை மீளவும் ஒத்திவைப்பு



ஐக்கிய மக்கள் சக்தி தனது கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்ததன் ஊடாக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாவதைத் தடுக்கும் வகையில் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, தாக்கல் செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு இன்று உயர் நீதிமன்ற

2➤

## தாதியர் பயிற்சிக்கான பூர்வாங்க நேர்முக தேர்வுகள் இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பம்

தாதியர் பயிற்சிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் தொடர்பான அனைத்து விபரங்களும் சுகாதாரத்துறை அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://www.health.gov.lk இல் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்கள் மேற்படி இணையதளத்தில் நேர்காணலுக்கான திகதி, இடம் மற்றும் தொடர்புடைய அனைத்து விபரங்களையும் அறிந்து கொள்ள முடியும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 2019-2020 க.பொ.த உயர்தர விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவு பாடப்பிரிவுகளில் சித்திபெற்று மாணவர் தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பித்த 4000 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் மத்தியிலிருந்து மாணவர் தாதியர் பயிற்சிக்கான பூர்வாங்க தகுதித் தேர்வுகளை இம்மாதம் 13ஆம் திகதி முதல் பெப்ரவரி 18ஆம் திகதி வரை நடத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ரெத-20)

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் மனுத் தாக்கல்



தற்போதுள்ள மின்சாரக் கட்டணத்தை குறைக்குமாறு உத்தரவிடக் கோரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவை இன்று தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி ஷியாமலி அத்துகோரல

2➤

## பருத்தித்துறையில் ஐஸ் போதைக்கு அடிமையான பெண் விளக்கமறியலில்

ஐஸ் போதைக்கு அடிமையான இளம் பெண்ணொருவர் பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் இரவு வேளை சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய மேற்படி பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த பொலிஸார், அந்தப் பெண்ணை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய வேளை அவர் போதைக்கு அடிமையானவர் எனக் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட

2➤

## தூரப் பயண பேருந்துகள் தரித்து நிற்கும் ஹோட்டல்கள் குறித்த புகார்களிருப்பின் வாட்ஸ்அப் மூலம் அறியத் தர கோரிக்கை

தொலைதூர சேவையில் ஈடுபடும் பேருந்துகள் உணவு மற்றும் தேநீர் தேவைகளுக்காக தரித்து நிற்கும் 60 சதவீத ஹோட்டல்கள் மிகவும் அசுத்தமாக இருப்பதாகவும், அவ்வாறான ஹோட்டல்கள் இருப்பின் 0788-714726 என்ற எண்ணிற்கு வட்ஸ்அப் செய்யுமாறும் தேசிய நுகர்வோர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

தொலைதூர சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தரித்து நிற்கும் பல உணவகங்களிலுள்ள கழிவறைகள் அசுத்தமாக காணப்படுவதை

2➤

# யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024

யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களின் ஏற்பாட்டில் இரண்டாவது முறையாக வழங்கவிருக்கும் "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" விருது 2024 ஆம் ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களது விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் மஹ்றூப் ஏ. காதர், முன்னாள் யாழ் மத்திய கல்லூரியின் சிறந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ் அஸீம், யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட முன்னாள் நட்சத்திர கோல் காப்பாளர் எம்.எம்.முனாஸ். ஆகிய நால்வரும் ஆவார்கள்.

யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024 விருதுக்கு எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பாக எம்.எஸ்.ஜாபிர் அவர்கள் அனுசரணை வழங்குகிறார்.



## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி



கிளிநொச்சி - இராமநாதபுரம் - வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாத பெருமாள் ஆலய தேர்த் திருப்பணி வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 29 வயதுடைய ஜேகதீஸ்வரன் பவித்திரன் என்ற இளைஞர் இன்று 11.20 மணியளவில் மின்சாரத்தால் தாக்குண்டு உயிரிழந்துள்ளார்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த உயிரிழந்த இளைஞரின் சடலம், கிளிநொச்சி நீதிமன்ற நீதவானால் பார்வையிடப்பட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினரிடம் சடலத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிசார் தெரிவித்தனர். (02)

## 1008 பானைகள் வைத்து மாபெரும் பொங்கல் விழா

1008 பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு,1,500 பரத நாட்டிய கலைஞர்களின் பங்கேற்புடன், 500 கோலங்களுடன் பொங்கலை வரவேற்கும் முகமாக மாபெரும் பொங்கல் திருவிழா கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் இன்று திருகோணமலையில் இடம்பெற்றது.

இலங்கை வரலாற்றில் இம்முறையே இவ்வாறு பிரமாண்டமாக பொங்கல் விழா நடத்தப்பட்டுள்ளது.

பொங்கல் விழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஜல்லிக்கட்டு போட்டியை கிழக்கு ஆளுநர் நடத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### தூரப் பயண பேருந்துகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகைப்படமெடுத்து மக்களில் பலர் தமக்கு அவற்றை அனுப்பியுள்ளனர் எனவும் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார்.

தொலைதூரப் பேருந்துகள் நிறுத்தப்படும் பல உணவகங்களில் குறித்த பேருந்துகளின் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு சிறந்த உணவுகள் வழங்கப்படும் அதேவேளை பயணிகளுக்கு தரமற்ற, பழைய உணவுகள் விற்கப்படுவதாகவும் மேலும் தெரிவித்துள்ள அவர், இத்தகைய ஹோட்டல்களை கண்டறியும் நோக்கில் தேடுதல் மற்றும் கண்காணிப்பு பயணத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ரெத-21)

### பருத்தித்துறையில் ஐஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளில், அவர் தாய், தந்தை இல்லாத நிலையில், பேத்தியாருடன் தங்கியே வாழ்ந்து வருகின்றார் எனவும், அண்மைக்காலமாக ஐஸ் போதைக்கு அடிமையாகி உள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் அந்தப் பெண்ணை முற்படுத்திய வேளை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

### மின் கட்டண அதிகரிப்புக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார சபை, மின்சக்தி அமைச்சர், அந்த அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபைக்கு 52 பில்லியன் ரூபா இலாபம் கிடைத்துள்ளது. எனினும், நியாயமற்ற வகையில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் மூலம் 60 இலட்சம் மின்சார பாவனையாளர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனத் தீர்ப்பளிக்கக் கோரி இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

### டயனா கமகேவின் மனு மீதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் யசந்த கோதாகொட முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட 11 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை உள்ளிட்ட தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரித்து, கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை வலுவற்றதாக்குமாறும் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே குறித்த மனுவில் கோரியுள்ளார்.

### காணாமல் ஆக்கப்பட்டோர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவுக்குப் போராட்டம் எதனையும் முன்னெடுப்பதற்கு நீதிவான் நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையிலும் அவரும் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்துக்குள் செல்ல முற்பட்டபோது அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார், ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும், ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா மற்றும் போராட்டத்தை வீடியோ எடுத்த மீரா ஜாஸ்மின் ஆகிய இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவர் மீதும் நீதிமன்றக் கட்டளையை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அமைதிக்குப் பங்கம் விளைவித்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் வவுனியா பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், போராட்டத்தை வீடியோ எடுத்த பெண்ணுக்குப் பிணை வழங்கியும் வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை நீதிமன்றில் ஆஜர்படுத்திய சமயத்தில் அவரைக் கைது செய்த நடவடிக்கையின்போது இரு பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமையால் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டிலும், நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தில் குருதிக்கொடை மற்றும் இலவச மருத்துவ முகாம்





கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2021 க.பொ.த. சாதாரண தர பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், குருதிக்கொடை மற்றும் இலவச மருத்துவ முகாம் திருவையாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் முதல்வர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெற்ற குறித்த மருத்துவ முகாமில் தற்போது மருத்துவர்களாக கடமையாற்றும் பாடசாலையின் பழைய மாணவர்களும் மருத்துவ சேவையினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த குருதிக்கொடை மற்றும் மருத்துவ முகாமில் பொதுமக்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (02)

# அறிவுச் சமரில் மஹ்மூத் மகளிர் கல்லூரி சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்தது!



(நூருல் ஹுதா உமர்)

75 வது ஆண்டில் காலடியெடுத்து வைத்திருக்கின்ற கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் பவளவிழாவை முன்னிட்டு அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், அறிவுச் சமர் கலை மன்றத்துடன் இணைந்து நடாத்திய கல்முனை வலய 1ஏபி சூப்பர் தர தேசிய பாடசாலைகளுக்கிடையிலான "அறிவுச் சமர் சீசன் 2" போட்டி நிகழ்ச்சிகள் டிசம்பர் 26 ஆம் திகதி முதல் நடைபெற்றன.

இப்போட்டிகளில் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி, நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை, காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி, கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை, மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி மற்றும் மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி ஆகியன பங்குபற்றியிருந்தன.

புள்ளிகளின் அடிப்படையில் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆகியன இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.

நேற்று (07) சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்ற அறிவுச் சமரின் இறுதிப்போட்டியில் கல்முனை சாஹிறாக் கல்லூரி 250 புள்ளிகளைப் பெற, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி 2400 புள்ளிகளைத் தனதாக்கி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

# அல்-ஆயிஷா பாலர் பாடசாலை மாணவர்கள் இறுதியாண்டு விழா

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை அல்-ஆயிஷா பாலர் பாடசாலையின் மாணவர்களுக்கான இறுதியாண்டு விழா கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை அட்டாளைச்சேனை லொய்ட்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரியுரையாளர் பேராசிரியர் டொக்டர் எம்.சி.ஏ.நாஸர், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபுர், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ் மற்றும் கிழக்கின் கேடத்தின் தலைவரும் முன்னால் அக்கரைப்பற்று அனைத்து ஜும்மாஆ பள்ளிவாசல் சம்மேளனத்தின் தலைவருமாகிய எஸ்.எம்.சபீஸ், உதவி வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஏல்.பாயிஸ், அதிபர்கள் அன்வர் நௌசாத்,நளீம் தொழிலதிபர்கள் ஏ.சி.நியாஸ், எம்.எஸ்.பைறூாஸ் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் என பலரும் கலந்துகொணடனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் நடனங்களும் பேச்சு மற்றும் ஏனைய கலைத் திறமைகளும் அரங்கேறியிருந்தன.



# அமெரிக்காவின் சியாட்டிலில் பாலஸ்தீன ஆதரவாளர்கள் போரை நிறுத்த வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம்!




காஸாவில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிரான போரை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வலியுறுத்தி அமெரிக்காவின் சியாட்டில் நகரில் பாலஸ்தீன ஆதரவாளர்கள் சனிக்கிழமை திடீரென சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

இதனால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவுக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

இது தொடர்பாக 'சியாட்டில் டைம்ஸ்' வெளியிட்ட செய்தியில், இஸ்ரேல் - ஹமாஸ் போர் 4 ஆவது மாதத்தை எட்டியுள்ள நிலையில் சியாட்டில் நகரில் பாலஸ்தீன ஆதரவாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாகாணங்களுக்கு இடையிலான முக்கிய நெடுஞ்சாலையில் பாலஸ்தீன கொடிகள் மற்றும் பதாகைகளுடன் குவிந்து திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

போரை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்றும், பாலஸ்தீனத்துக்கு சுதந்திரம் வேண்டும் என்றும், ஆக்கிரமிப்பாளர்கள் (இஸ்ரேல்) அந்தப் பிராந்தியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர்கள் முழக்கமிட்டனர்.

இதையடுத்து, அப்பகுதிக்கு வந்த காவல் துறையினர் அவர்களுடன் பேச்சு நடத்தி அங்கிருந்து கலைந்து போகச் செய்தனர்.

இந்தப் போராட்டத்தால் மாகாண நெடுஞ்சாலையில் சில மணி நேரத்துக்கு போக்குவரத்து முற்றிலும் தடைபட்டது. சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவுக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இதையடுத்து, மாற்றுப் பாதைகளில் வாகனங்கள் திருப்பிவிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒஅக்டோபர் 7 ஆம் திகதி தெற்கு இஸ்ரேல் பகுதியில் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் தாக்குதல் நடத்தி 1,200 பேரைக் கொன்றதுடன் 250 க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர் என்று செய்திகள் வெளியாகின. இதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரைக் குறிவைத்து பாலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் தாக்குதலைத் தொடங்கியது. (04)

# பங்களாதேஷில் 12 ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தல் வன்முறைகளுக்கிடையில் 40 சதவீத வாக்குகள் பதிவாகின

## பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு அபார வெற்றி



பங்களாதேஷில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 12 ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் புறக்கணிப்பு மற்றும் வன்முறைகளுக்கு மத்தியில் சுமார் 40 சதவீத வாக்குகள் பதிவாகின.

வாக்குப் பதிவு மாலை 4 மணியுடன் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, வாக்கு எண்ணிக்கை உடனடியாக தொடங்கப்பட்டது.

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தையொட்டி அமைந்துள்ள அண்டை நாடான பங்களாதேஷின் நடப்பு நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் வரும் ஜனவரி 29 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதையொட்டி, அந்த நாட்டின் 300 தொகுதிகளுக்கான 12 ஆவது பொதுத் தேர்தல் கடந்த நவம்பரில் அறிவிக்கப்பட்டது. தேர்தலுக்கு முன்பாக ஒரு தொகுதியில் வேட்பாளர் உயிரிழந்ததால், மற்ற 299 தொகுதிகளில் தேர்தல் நடத்தப்பட்டது.

சுமார் 11.9 கோடி மக்கள் வாக்களிக்க தகுதி பெற்ற இந்தத் தேர்தலில் 27 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 1534 வேட்பாளர்களும், 436 சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

27 கட்சிகளில் ஜதியா கட்சி (ஜாபா) தவிர மற்ற அனைத்து கட்சிகளும் ஆளுங்கட்சியான அவாமி லீக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

நாடு முழுவதும் சுமார் 42,000 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டன. இந்தத் தேர்தலில் முதல் முறையாக தபால் வாக்கு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

மூன்று இந்திய பிரதிநிதிகள் உள்பட 100க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பார்வையாளர்கள் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். பாதுகாப்புப் படையினர் உள்பட 7.5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பு காரணமாக மந்தமாக நடைபெற்ற வாக்குப் பதிவில் சுமார் 40 சதவீத வாக்குகளே பதிவாகின.

வாக்குக்கு பணமளித்த குற்றச்சாட்டில் தண்டனை பெற்று, வீட்டுச் சிறையிலுள்ள முன்னாள் பிரதமர் கலீதா ஸியாவின் 'பங்களாதேஷ் தேசியவாத கட்சி (பிஎன்பி)' உள்பட 15 எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்தன.

கடந்த 2014 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலையும் எதிர்க்கட்சியான பிஎன்பி புறக்கணித்தது. கடந்த 2018 தேர்தலில் பிஎன்பி மீண்டும் போட்டியிட்டது. அத்தேர்தலில் சாதனை அளவாக, 80 சதவீதத்துக்கும் மேல் வாக்குகள் பதிவாகின.

தோல்வியில் இருந்து தப்பிக்கவே, இந்த முறை தேர்தலை பிஎன்பி புறக்கணித்திருப்பதாக ஆளும் அவாமி லீக் விமர்சித்துள்ளது.

வன்முறையைத் தடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கையாக தேர்தலுக்கு முன் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். எனினும், மோதல் காரணமாக நர்சிங்டி மாவட்டத்தில் ஒரு இடத்திலும், நாராயண்கஞ் மாவட்டத்தில் 2 இடங்களிலும் வாக்குப்பதிவு ரத்து செய்யப்பட்டது.

நர்சிங்டி மாவட்டத்தில் தேர்தல் மோசடியில் ஈடுபட்டதாக தொழில்துறை அமைச்சர் நுரூல் மஜித் மஹ்முத் ஹுமாயூனின் மகன் கைது செய்யப்பட்டார்.

டாக்கா நகர கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குப்பதிவு மையத்துக்கு, மகளுடன் வந்து பிரதமர் ஷேக் ஹசீனா வாக்களித்தார்.

இதைத் தொடர்ந்து, செய்தியாளர்களுக்கு பிரதமர் ஷேக் ஹசீனா அளித்த பேட்டியில், 'மக்கள் தங்களின் ஜனநாயகத்தை நிறைவேற்ற, ஏதுவான சூழலை நாங்கள் உருவாக்கித் தந்துள்ளோம். ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையற்ற எதிர்க்கட்சி கூட்டணிதான் சில அசம்பாவித சம்பவங்களில் ஈடுபடுகின்றது.

பொதுத் தேர்தலை மக்கள் ஏற்றுக் கொண்டார்களா, இல்லையா என்பதே எனக்கு முக்கியம். சர்வதேச ஊடகங்களின் ஏற்பு குறித்து எனக்கு கவலையில்லை' என்றார்.

பங்களாதேஷ் பிரதமரும் அவாமி லீக் கட்சித் தலைவருமான ஷேக் ஹசீனா கோபல்கன்ஜ்-3 தொகுதியில் 2,49,965 வாக்குகளுடன் வெற்றி பெற்றார். கடந்த 1986 இலிருந்து அத்தொகுதியில் போட்டியிட்டு வரும் ஹசீனா, 8 ஆவது முறையாக வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட பங்களாதேஷ் சுப்ரீம் கட்சியின் நிஸாம் உதீன் லஷ்கர் 469 வாக்குகள் மட்டுமே பெற்றார்.

# நேற்றும் வடகொரியா எறிகணைச் சோதனை கொரிய தீபகற்பத்தில் தொடரும் பதற்றம்!

தென் கொரியாவுடனான சர்ச்சைக்குரிய கடல் எல்லையையொட்டி, வடகொரியா ஞாயிற்றுக்கிழமையும் எறிகணைகளை வீசியது. 90க்கும் அதிகமான முறை எறிகணைகள் வீசப்பட்டதாக தென் கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

தென் கொரியாவின் மேற்கு கடல் எல்லையையொட்டி, சுமார் 200 க்கும் மேற்பட்ட எறிகணைகளை வெள்ளிக்கிழமையும், 60 முறைக்கு மேல் சனிக்கிழமையும் எறிகணைகளை வீசி வடகொரியா சோதனையில் ஈடுபட்டதாக தென் கொரிய ராணுவம் குற்றஞ்சாட்டியது.

இதுதொடர்பாக வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன்னின் சகோதரி கிம் யோ ஜோங் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

தென்கொரியாவின் துப்பறியும் திறன்களைக் கண்டறியும் நோக்கில், கடலோர எறிகணைகளின் ஒலியை உருவகப்படுத்தி, வெடிமருந்தை மட்டுமே வடகொரியா சனிக்கிழமை வெடிக்கச் செய்தது. அந்தச் சோதனையில் எதிர்பார்த்தபடி தெளிவான முடிவு கிடைத்தது. வெடிமருந்து வெடித்த ஒசையை எறிகணைகளின் ஒசையாக தென்கொரியாக தவறாகக் கணித்துள்ளது.

தென் கொரிய ராணுவத்தினர் 'குண்டர்கள்' - அவர்கள் ராணுவ சீருடையில் உள்ள 'கோமாளிகள்'. தென் கொரிய மக்கள் பரிதாபத்துக்குரியவர்கள். ஏனெனில் அந்த மக்கள் தங்கள் நாட்டின் பாதுகாப்பை திறனற்றவர்களிடம் ஒப்படைத்துள்ளதுடன், அவர்களுக்கு பெரும் அளவில் வரி செலுத்துகின்றனர், என்று கடுமையாகச் சாடியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, தென் கொரியாவின் முப்படைத் தளபதி கிம் மியூங் சூ வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

தென் கொரியாவின் மேற்கு கடல் எல்லையையொட்டி தொடர்ந்து 3 ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் 90 க்கும் மேற்பட்ட முறை எறிகணைகளை வீசி வடகொரியா சோதனையில் ஈடுபட்டது.

இந்நிலையில், கிம் யோ ஜோங் தெரிவித்துள்ள கருத்துகள் 'நகைச்சுவை போன்ற, அருவருப்பான பரப்புரை' ஆகும். அவரின் கருத்துகள் தென் கொரிய ராணுவம் மீது நாட்டு மக்கள் வைத்திருக்கும் நம்பிக் கையை வலுவிழக்கச் செய்து, பிளவைத் தூண்டும் வகையில் உள்ளன. வடகொரியாவின் ராணுவ நடவடிக்கைகளை மிக உன்னிப்பாக தென் கொரியா கவனித்து வருகிறது. ஆத் திரமூட்டும் நடவடிக்கைகளை வடகொரியா உடனடியாக நிறுத்த வேண்டும், என்று வலியுறுத்தினார்.

ஞாயிற்றுக்கிழமை எறிகணைகள் வீசப்பட்டதை வடகொரிய ராணுவம் உறுதி செய்தது. ராணுவப் பயிற்சியின் அங்கமாக அவை வீசப்பட்டதாக தெரிவித்த அந்நாட்டு ராணுவம், தென் கொரியாவுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லாத திசையில் எறிகணைகள் வீசப்பட்டதாகவும் தெரிவித்தது.

கடந்த 2022 ஆம் ஆண்டுமுதல் அதிக எண்ணிக்கையில் வடகொரியா ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டுள்ளது. அதேவேளையில், வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து ராணுவ கூட்டுப் பயிற்சியை தென் கொரியா விரிவுபடுத்தியுள்ளது. இதனால் வடகொரியா, தென்கொரியா இடையே பகைமை அதிகரித்துள்ளது. (04)

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அனர்த்த முகாமைத்துவக் குழு அவசர ஒன்று கூடல்



(அஸ்ஹர் ஆதம்)

சுகாதார நிறுவனங்களிலுள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்களை தயார்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடலொன்று கல்முனையில் இடம் பெற்றது.

கடந்த சில தினங்களாக இப்பிரதேசத்தில் பெய்துவரும் அடை மழை காரணமாக தாழ்நிலைப் பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் மேலும் சில இடங்களில் வெள்ள அனர்த்தமும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் கடும் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் பொதுமக்களை அவதானத்துடன் செயல்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் ஆகியன அறிவித்துள்ளன.

வெள்ள அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டும், அனர்த்தத்தில் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையினை வழங்கும் பொருட்டும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனர்த்த முகாமைத்துவக் குழு அவசரமாக ஒன்று கூடியது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களூடாக அனர்த்தம் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல்.

வைத்தியசாலைகள் உள்ளிட்ட பிராந்திய சுகாதார நிறுவனங்களில் உள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்களை ஒழுங்குபடுத்தி தயார் நிலையில் வைத்துக் கொள்ளல்.

அனர்த்த நிலைமைகளின் போது அதற்கு முகம் கொடுப்பது தொடர்பாகவும் மக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.

வெள்ள நீரினால் ஏற்படக்கூடிய தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் முறையான வேலை திட்டங்களை மேற்கொள்ளல். அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு மருத்துவ சேவையினை வழங்கும் பொருட்டு மருத்துவ முகாம்களை நடாத்துதல், போன்றவை பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனர்த்த முகாமைத்துவக்குழு இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத் ஊடாக அனர்த்த பாதுகாப்பு தொடர்பான விடயங்களை முன்னெடுத்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# சின்னம்மை தடுப்பூசி வேலைத்திட்டம் கல்முனை பிரதேசத்தில் முன்னெடுப்பு



(நூருல் ஹுதா உமர்)

சிறுவர்களிடையே வேகமாக பரவி வரும் சின்னம்மை (சின்னமுத்து) தொற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு 6 முதல் 9 மாத வயதுடைய குழந்தைகளுக்கு மேலதிகமான சின்னமுத்து தடுப்பூசி ஒன்றை வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வேலைத்திட்டம் சனிக்கிழமை முதல் கல்முனை பிராந்தியத்திலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸாலின் மேற்பார்வையின் கீழ் இத்தடுப்பூசி வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக 68 தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் இப்பணி முன்னெடுக்கப்பட்டது. இதுவரை மொத்தமாக 1562 பேருக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தினம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி திகழி பாடசாலையில் உயர்தர அனுமதி தொடர்பான கலந்துரையாடல்





(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தர கலை மற்றும் வர்த்தக பிரிவுகளுக்கு புதிய மாணவர்கள் அனுமதி தொடர்பான பெற்றோர் மற்றும் மாணவர்களுடனான கலந்துரையாடல் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.ஏ றஸ்ஸாக் தலைமையில் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உயர்தர வகுப்புக்களில் மாணவர்கள் தமது பிரிவுகள் மற்றும் பாடங்களை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும், அதன்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான முழுமையாக ஆராயப்பட்டதுடன், எதிர்வரும் 2024 ஜனவரி 17 ம் திகதி உயர்தர மாணவர்களின் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் அதிபர் தெரிவித்தார்.






# யூ.எஸ்.எப்.ஶ்ரீலங்கா இளைஞர் பேரவை சாய்ந்தமருதில் அங்குரார்ப்பண நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யூ.எஸ்.எப்.ஶ்ரீலங்கா இளைஞர் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்ச்சி திட்டமானது அமைப்பின் உப செயலாளரும் கிழக்கு பல்கலைக்கழக மாணவருமான முஹம்மட் ஜப்ரான் தலைமையில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது, யூ.எஸ்.எப்.ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவர் மற்றும் செயற்பாட்டாளர்களினால் அமைப்பின் செயற்திட்டங்கள் மற்றும் எதிர்கால நோக்கங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

# 14ஆவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

## GOLD Sponsor - TOKYO CEMENT GROUP இணைந்தது

2024 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் (JITF) GOLD Sponsor ஆக டோக்கியோ சிமென்ட் குழுமம் பங்காற்றுகிறது.

வட தீபகற்பத்தில் உள்ள தங்கள் வாடிக்கையாளர்களுடன் இணைந்து செயற்படுவதற்கும், அவர்களுடனான தொடர்புகளை மேலும் மேம்படுத்திக்கொள்ளவும் ஒரு தனித்துவமான தளமாக இருக்கும் இந்த மாபெரும் நிகழ்விற்கு தாங்கள் தொடர்ந்து இரண்டாவது வருடமாக அனுசரணை வழங்குவதையிட்டு பெருமையடைவதாக டோக்கியோ சிமென்ட் குழுமம் தெரிவிக்கிறது.

கடந்த பல வருடங்களாக JITF இல் நாங்கள் பங்கேற்பது, பிராந்தியத்தில் உள்ள எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோகத்தர்களுடன் நெருக்கத்தை அதிகரிப்பதற்கான பல வழிகளைத் திறந்து வைத்துள்ளது.

ஒரே இடத்தில் இவ்வளவு பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைச் சந்திப்பது, இன்றைய பொருளாதாரச் சூழலில் அனைத்து வணிகங்களுக்கும் தங்கள் விளம்பரப்படுத்தலை அதிகரிக்க ஒரு சிறந்த வாய்ப்பினை வழங்குகிறது.

டோக்கியோ சிமென்ட் குழுமத்தால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சிமென்ட், கொங்கிரீட் மற்றும் சிமென்ட் அடிப்படையிலான மதிப்புக் கூட்டப்பட்ட தயாரிப்புகளை உள்ளடக்கிய நாட்டின் பரந்த அளவிலான கட்டுமானத் தீர்வுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இந்த வர்த்தகக் கண்காட்சி சிறந்த இடமாகும்.

இந்த ஆண்டுக் கண்காட்சியில், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் முன்னணிப் பங்குதாரராக, டோக்கியோ சிமென்ட் பல புதிய தயாரிப்புகளையும் தீர்வுகளையும் காட்சிப்படுத்துகிறது. அவை கட்டுமானப் பொருட்கள் சந்தையில் புரட்சியை ஏற்படுத்துபவையாக உள்ளன.

TOKYO CEMENT GROUP

டோக்கியோ சிமெண்டின் சகல தயாரிப்புகளையும் காண்பதற்கு எங்கள் காட்சியறைக்கு வருமாறு JITF க்கு வரும் அனைத்து பார்வையாளர்களையும் அழைக்கிறோம்.

இந்த நிகழ்வை இவ்வளவு பெரிய அளவில் ஏற்பாடு செய்துள்ளமைக்காக ஏற்பாட்டாளர்களை வாழ்த்துவதுடன், இந்த ஆண்டு யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் நிச்சயமான வெற்றியாக அமையும் என்று நம்புவதாகவும் டோக்கியோ சிமென்ட் குழுமம் குறிப்பிட்டுள்ளது.






# கோட்டைக்கல்லாறு பாலத்தில் பேருந்து – கனரக வாகனம் விபத்து



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கோட்டைக்கல்லாறு பாலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தும் கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு இருந்து கல்முனை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேரூந்தும், தம்புள்ள நோக்கி பயணித்த கனரக வாகனமும் கோட்டைக்கல்லாறு பாலத்தில் இன்று நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பலர் காயமடைந்துள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான கனரக வாகன சாரதி களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 10 வருடங்களுக்கு மேல் பாவனையற்ற மருந்து நிலையத்தை இயக்க நடவடிக்கை



திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட மஜீத் நகர் ட சந்தியில் உள்ள மருத்து நிலையம் பல வருட காலமாக பாழடைந்த நிலையில் காணப்பட்டது.


குறித்த கட்டிடம் ஆரம்பிக்கப்பட்டு திறப்பு விழா மட்டுமே இடம் பெற்ற நிலையில் அது பயன்படுத்தப்பட வில்லை.

இப்பகுதியில் உள்ள கர்ப்பிணி தாய்மார்கள், குழந்தைகளுக்கான நிறை போசாக்கு தொடர்பிலான சிகிச்சைகளுக்கு பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊடாக மீள் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம்.அஜீத் குறித்த கட்டிடத்தை பார்வையிட்டது டன், எதிர் வரும் வாரமளவில் மீள் இயங்க செய்வதாக தெரிவித்துள்ளார்.

இதனை மீள் இயங்க செய்தால் ஏராளமான மக்கள் இதன் மூலம் பயனடைவர் என்று அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358